செ.வெ.எண்: 8 நாள்: 03.03.2017

# பத்திரிகைச்செய்தி

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு (ஆண் /பெண் இருபாலர்) வேலைவாய்ப்புமுகாம் நடைபெறுதல்

புதுக்கோட்டை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, TNSRLM மற்றும் புதுவாழ்வுத்திட்டம் வாயிலாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 18 முதல் 35 வயது வரை உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு (ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும்) தனியார் தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு வழங்கிட முதல் கட்டமாக புதுக்கோட்டை, திருமயம், திருவரங்குளம், அரிமளம், பொன்னமராவதி மற்றும் கந்தர்வகோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற ஆண் மற்றும் பெண் இருபாலரும் பயன்பெறும் வகையில் **புதுக்கோட்டை, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (தன்னாட்சி), மாவட்டஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 10.03.2017**அன்று காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை வேலைவாய்ப்புமுகாம் நடைபெறவுள்ளதால் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்கள் உரியமாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் பட்டியல், சாதிசான்றிதழ், ஆதார் அட்டை, குடும்பஅட்டை(RationCard), புகைப்படம் மற்றும் தொழிற்பயிற்சி தொடர்பான சான்றிதழ்களுடன் கலந்து கொள்ளவும் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களும் பங்குபெற்று இளைஞர்களை வேலைக்கு தேர்வு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட ஆறு ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் பொருட்டு அனைத்து தனியார் தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு முகாமில் பங்கு பெற்று இருபாலருக்கும் (ஆண் மற்றும் பெண்) வேலைவாய்ப்பு வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர்**திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப.,** அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**